37

# காய்ச்சல் வலிப்பு

# FEBRILE CONVULSION




வெளியீடு :

சுகாதார கல்விசார் பொருட்கள் தயாரிப்பு அலகு,
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.
2005

## காய்ச்சல் வலிப்பு
(FERBILE CONVULSION)

1. மூளைக் கலங்களில் ஏற்படும் அசாதாரண நிகழ்வால் உடல் அவயவங்களில் ஏற்படும் அசாதாரண அசைவுகள் **"வலிப்பு"** என அழைக்கப்படும்.

2. வலிப்பு ஏற்படுவதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் காய்ச்சலும் (உடல் வெப்பநிலை உயருதல்) ஒரு காரணமாகும். இதனைக் காய்ச்சல் வலிப்பு என்பர்.

3. காய்ச்சலினால் உயரும் வெப்ப நிலையை குறைப்பதன்மூலம் காய்ச்சல் வலிப்பினை வராது தடுக்கலாம்.

4. காய்ச்சல் வலிப்பு 6 மாதம் தொடக்கம் 6 வயது வரையுள்ள சிறுவர்களையே தாக்கும். பிள்ளை வளரும்போது இக் காய்ச்சல் வலிப்பு வருவது நின்றுவிடும்.

5. இக் காய்ச்சல் வலிப்பினால் குழந்தைக்கு ஏற்படும் பாதிப்புக்கள் புறக்கணிக்கத்தக்கது. எனினும் அரிதாக சில பிரச்சனைகள் ஏற்படக்கூடும். மிகமிக் அரிதாக மரணங்கூட ஏற்படலாம்.

6. உங்கள் குழந்கையின் வளர்ச்சிப்படிகள் சாதாரணமாக இருந்தால். இக் காய்ச்சல் வலிப்பினால் குழந்தையின் மூளை வளர்ச்சியில் எதுவித பாதிப்பும் ஏற்படாது.

7. காய்ச்சலின்போது குழந்தையின் உடல் வெப்பநிலை சடுதியாக உயரும்போதே காய்ச்சல் வலிப்பு ஏற்படும்.

8. வழமையாக காய்ச்சல் ஆரம்பித்து முதல் 24 மணித்தியாலங்களுக்குள் காய்ச்சல் வலிப்பு ஏற்படும்.

## காய்ச்சல் வலிப்பின் அறிகுறிகள்

1. சில நிமிடங்களில் நினைவு இழத்தல்.
2. கண் விழிகள் செருகுதல்.
3. கை கால்கள் சடுதியாக மடங்கி விரிதல் அல்லது கை கால்கள் மரக்கட்டைபோல் விறைத்தல்.
4. வாயிலிருந்து நுரை வெளியேறுதல்.
5. சலம், மலம் கட்டுப்பாடின்றி வெளியேறல்.

இவ்வறிகுறிகள் சில நிமிடங்கள் தொடக்கம் ½ மணி நேரம்வரை நீடிக்கலாம்.

**ஆனாலும் பெற்றோர்கள் சில விடயங்களைக் கவனிக்க வேண்டும்.**
**அதாவது :**

- காய்ச்சல் இல்லாமலே வலி வருதல்.
- காய்ச்சலுடன் கூடிய வலி ½ மணி நேரத்தின் பின்னும் நீடித்தல்.
- ஒரு பக்கக் கை கால்களில் மட்டும் அறிகுறி ஏற்படல்.
- அசாதாரண வளர்ச்சிப் படியுடன் கூடிய பிள்ளைக்கு காய்ச்சல் வலிப்பு வருதல்.

ஆகியவைகள் இருப்பின் உடனடியாக வைத்திய உதவியை நாடுதல் கட்டாயமானது.

****

## காய்ச்சல் வலிப்பைத் தடுத்தல்

குழந்தைக்கு காய்ச்சல் வந்தவுடன் காய்ச்சலின் வெப்பநிலையைக் குறைத்தால் காய்ச்சல் வலிப்பைத் தடுக்கலாம்.

**எனவே காய்ச்சல் வந்தால் தாய்மார்கள் செய்ய வேண்டியது :**

1. குழந்தையின் ஆடைகளைக் களைந்து வெப்பம் வெளியேற வழி செய்யுங்கள். போர்வையினால் போர்த்த வேண்டாம்.

2. உடம்பைத் தண்ணீரால் நனையுங்கள்.

   ✧ விசேடமாக முதுகு, கமக்கட்டு, கழுத்து மற்றும் அரை ஆகிய பகுதிகள்.

   ✧ சுடு நீரோ, குளிர் நீரோ உகந்ததல்ல. சாதாரண நீரே சரியானது.

3. தொடர்ந்தும் காய்ச்சல் இருப்பின் (பரசிற்றமோல் - Paracetamol ) பாணி அல்லது மாத்திரையைத் தகுதியான வைத்தியரின் ஆலோசனையுடன் கொடுக்க வேண்டும்.

4. காய்ச்சல் தொடர்ச்சியாக இருப்பின் அல்லது வாந்தி, வயிற்றுப்போக்கு, இருமல், இளைப்பு, உணவில் பிரியமின்மை ஆகிய அறிகுறிகள் இருப்பின் தாமதமின்றி வைத்திய உதவியை நாடவும்.

## காய்ச்சல் வலிப்பு வந்தால் நீங்கள் செய்யவேண்டியவை :

- ☞ குழப்பமடையாதீர்கள்.
- ☞ அவசரத்தில் குழந்தையை நிமிர்த்தித் தூக்கவேண்டாம். அவ்வாறு தூக்கின் குழந்தையின் சுவாசப் பையினுள் பதார்த்தங்கள் சென்று மரணத்தை விளைவிக்கும்.
- ☞ குழந்தையின் ஆடைகளைத் தளர்த்தி இடது பக்கப் புறமாகப் படுக்கவையுங்கள். அருகில் உள்ள பொருட்களை அகற்றவும்.
- ☞ குழந்தையின் வாயினுள் எதையும் வைக்கவேண்டாம்.
- ☞ உணவுத் துணிக்கைகள், சளி என்பன வாயினுள் இருந்தால் விரலினால் கவனமாக அகற்றவும்.
- ☞ குழந்தையை ஈரத் துணியினால் துடைக்கவும். முடியுமானவரை விரைவில் வைத்திய உதவியை நாடவும்.

**வலிப்பு இருக்கும் நேரத்தில் எதையும் வாயில் கொடுக்க வேண்டாம்.**

**பரசிற்றமோல் பாணி / மாத்திரை கொடுக்கும்போது கவனிக்க வேண்டியவை :**

- மாத்திரையைவிட பாணி மருந்தே சிறந்தது.
- 6 மணித்தியாலயத்திற்கு ஒருதடவை மட்டுமே கொடுக்கவும். (அதாவது ஒரு நாளில் 4 தடவைகள் மட்டும்) தகுதியான வைத்தியர் சொல்லும் மருந்தின் அளவைக் கொடுக்கவும்.
- கொடுக்கப்பட வேண்டிய மருந்தின் அளவு, நேர இடைவெளி என்பன தகுதியான ஒரு வைத்தியரின் ஆலோசனைப்படி அமையவேண்டும்.
- 3 நாட்களுக்கு மேல் தொடர்ந்தும் காய்ச்சல் இருப்பின் வைத்தியசாலைக்குச் செல்லவும்.

**பரசிற்றமோல் பாணி / மாத்திரை அளவுக்கு மிஞ்சிக் கொடுக்கப்படுவதால் பக்க விளைவுகளும், நச்சுத் தன்மையும் ஏற்பட வாய்ப்புண்டு.**

**அனுசரணை :**

**Lions Club of Kopay**
'Rajasthan'
Irupalai Road,
Kopay.

ஸ்ரீ மீனாட்சி அச்சகம், நல்லூர் ☎ 2223586